செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 479 நாள்: 10/8/17

# பத்திரிக்கைச் செய்தி

## கால்நடை பராமரிப்புத்துறை, வேலூர் மண்டலம்

## கோமாரிநோய் தடுப்பூசிப்பணி திட்டம் (13வது சுற்று)

## 01-09-2017 முதல் 21-09-2017 வரை

வேலூர் மண்டலத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவாவண்ணம் ஆண்டிற்கு இருமுறை கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் தடுப்பூசி போடப்படுகிறது. அதன்படி இவ்வாண்டில் 13வது சுற்றுத் தடுப்பூசிப்பணி வரப்பெறும் 01.09.2017 முதல் 21.09.2017 முடிய இம்மண்டலத்தில் இத்தடுப்பூசிப்பணி சுமார் 5.50 லட்சம் கால்நடைகளுக்கு (மாட்டினங்களுக்கு) மேற்கொள்ளப்பட உள்ளது. அனைத்து கிராமங்களிலும் வரப்பெறும் 15.08.2017 அன்று இதற்கென சிறப்பு கிராம சபா பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் நடைபெற உள்ளது.

எனவே, இம்மண்டலத்தின் அனைத்து கிராமங்களிலுள்ள கால்நடைகள் வளர்க்கும் விவசாயப் பெருமக்களும், பண்ணையாளர்களும், கால்நடை வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும், மற்றும் தொழில் முனைவோரும் முகாம்கள் நடைபெறும் போது, தங்களது கால்நடை செல்வங்களை ஓட்டிக்கொண்டு வந்து கால்நடை பராமரிப்புத் துறையினர் மூலம் தடுப்பூசியினை போட்டுக் கொள்ளும்படியும், கோமாரி நோயின் பாதிப்பிலிருந்து கால்நடைகளை பாதுகாத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/-
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,
வேலூர்.

செ.ம.தொ.அ.
வேலூர் - 9.